# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093881

1. District மாவட்டம் : திருச்சி | PS காவல்நிலையம் : ஊ.த.த. பிரிவு திருச்சி | Year ஆண்டு : 2019 | FIR No. மு.த.அ. எண் : 04/2019 | Date நாள் : 07.03.19

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 07.03.19 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 14.30 Hrs — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.03.19 — Time : நேரம் 17.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Computerised Report

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — 8 கி.மீ வடகிழக்கு.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. மோகர் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மார்(மகேஷ்)
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 17.04.1967 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ரியல் எஸ்டேட் — (g) Address : முகவரி 4/469 பாலாஜி நகர், மெயின் ரோடு, திருவெறும்பூர் வட்டம், திருச்சி DT.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) தி.பாலசந்திரன், உதவி பொறியாளர், TNEB. அரியமங்கலம், திருச்சி.
   2) தி.சரவணன், கமர்சியல் இன்ஸ்பெக்டர், TNEB. அரியமங்கலம், திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 07.03.2019 மாலை 17.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், 4/469, பாலாஜி நகர், மெயின் வீதியில் வசித்து வரும் மாரிமுத்து மகன் M.குமார் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி, அரியமங்களம், டி.என்.இ.பி. ஏ.இ.இ திரு.பாலச்சந்திரன், சி.ஐ. சரவணன் மற்றும் புகார்தாரர் திரு.குமார் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 07.03.2019 இரவு 19.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.4/2019 சட்டப்பிரிவு 7(a)ஊழல் தடுப்பு (Amendment) சட்டம் 2018-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி, 7-3-2019அனுப்புதல் M.குமார், த/பெ மாரிமுத்து, 4/469, பாலாஜி நகர், மெயின் வீதி, திருவெறும்பூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.Kumar 7/3/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 07.03.19 20.00 Hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் : F. XAVIER RANI
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
VGAC, TRICHY.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

<u>திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.04/2019ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......</u>

பெறுதல் லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரி, திருச்சி. அய்யா, நான் திருவெறும்பூர் வட்டம், பாலாஜி நகரில் குடும்பத்துடன் வசிக்கிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் மற்றும் கட்டுமானம் செய்து வருகிறேன். திருச்சி பதிவு மாவட்டம், திருவெறும்பூர் சார்பதிவகம் சேர்ந்த பூலாங்குடி கிராமம், பட்டா எண்.1397-இல் கட்டுப்பட்ட அயன்புன்செய் சர்வே எண்.77/26-இல் கட்டுப்பட்ட ஹெக் 1.74.0 ஏர்ஸ்க்கு, ஏக்கர் 4.30 செண்ட் உள்ள நிலத்தினை மனைகளாக பிரித்து லெட்சுமி நகர் என பெயரிட்டு, விற்பனை செய்ததில், பிளாட் எண்.66-இல் 1200 சதுரடி கொண்ட வீட்டு மனையை பூலாங்குடி காலனியைச் சேர்ந்த வீரராகவன் மகன் ராஜேஷ் என்பவருக்கு கடந்த 2018 ஆம் ஆண்டில் விற்பனை செய்தேன். மேற்படி வீட்டுமனையில் 820 சதுரடி கொண்ட வீடுகட்டி அதற்கு கட்டுமான அப்ரூவல், ரெடிமேட் காம்பவுண்ட், மின் இணைப்பு உட்பட அனைத்து வசதிகளும் செய்து தருவதாக கடந்த 23.11.2018 ஆம் தேதி திருச்சியில் பதிவுப் பெற்ற நோட்டரி பப்ளிக் முன்பு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டோம். அதன்படி மேற்படி, பிளாட் எண்.66-க்கு வீடுகட்டுவதற்கு தற்காலிக மின் இணைப்பு கேட்டு, இடத்தின் உரிமையாளர் திரு.ராஜேசிடம் சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தில் கையொப்பம் பெற்று, கடந்த 16.02.2019 ஆம் தேதி திருச்சி, நவல்பட்டு, டிஎன்.இ.பி உதவி பொறியாளர் அலுவலகத்தில் தற்காலிக மின்இணைப்பு பெற ஆன்லைன் மூலம் ரூ.50/= கட்டணம் செலுத்தி விண்ணப்பித்து, விண்ணப்பம் தொடர்பான ஆவணங்களை அதனுடன் இணைத்து நவல்பட்டு, டி.என்.இ.பி ஆபீசில் உள்ள உதவி பொறியாளரிடம் கொடுத்தேன். உடனே உதவி பொறியாளர் என்னுடைய ஆவணங்களை பார்த்து பரிசீலனை செய்து, மேற்படி பிளாட்டிற்கு மின் இணைப்பு பெற கூடுதலாக மின் கம்பம் நடவேண்டும், அதற்கான மதிப்பீடு தயார் செய்து அதனுடன் உங்களுடைய விண்ணப்பத்தை அரியமங்கலத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கிறேன் என்று தெரிவித்து, நீங்கள் 10 நாட்கள் கழித்து என்னை வந்து பாருங்க என்று சொன்னார். அதன்படி நான், சுமார் 10 நாட்கள் கழித்து நவல்பட்டு டிஎன்.இ.பி ஆபிசுக்கு சென்று உதவி பொறியளாளர் அவர்களை சந்தித்து, மேற்படி விண்ணப்பம் தொடர்பாக விபரம் கேட்டேன். உதவி பொறியாளர் அவர்கள் என்னிடம், உங்களுடைய விண்ணப்பத்தை அரியமங்கலம் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டேன் என்று தெரிவித்து, நீங்க அங்கு போய் பார்த்து ஏ.இ.இ. அவர்களை பார்த்துக் கேளுங்கள் என்று சொன்னார். அதன்படி நான் 27.02.2019 அன்று காலை சுமார் 10.30 மணியளவில் அரியமங்கலத்தில் உள்ள டி.என்.இ.பி. ஆபீசுக்கு சென்று, அங்கிருந்த உதவி செயற்பொறியாளர் திரு.பாலசந்திரன்

அவர்களை நேரில் அவரது அறையில் சந்தித்து, மேற்படி தற்காலிக மின் இணைப்பு விண்ணப்பம் தொடர்பாக விபரம் சொல்லிகேட்டேன். அப்போது, அவர், அவ்வலுவலகத்திலிருந்த சி.ஐ. சரவணன் அவர்களை சந்தித்து விபரங்கள் கேளுங்கள் என்று தெரிவித்தார். அதன்படி நான் சி.ஐ. சரவணன் அவர்களை சந்தித்து தற்காலிக மின் இணைப்பு விண்ணப்பம் தொடர்பாக விபரம் கேட்டேன். அவர், என்னிடம் உங்களுடைய விண்ணப்பம் நவல்பட்டு, ஏ.ஈ ஆபிசில் இருந்து வந்துவிட்டது. நீங்கள் ஒருவாரம் கழித்து வாங்கள் என்று தெரிவித்தார். அதன்படி நான், இன்று 07.03.2019 அன்று மதியம் சுமார் 02.30 மணிக்கு அரியமங்கலத்தில் உள்ள டி.என்.இ.பி. ஆபீசுக்கு சென்று, அங்கிருந்த சி.ஐ. சரவணன் அவர்களை சந்தித்தேன். அப்போது, ஏ.இ.இ. பாலச்சந்திரன் அவரது அறையில் இருந்தார். அவர் என்னை அழைத்துக்கொண்டு ஏ.இ.இ. அறைக்குள் சென்று, சி.ஐ. சரவணன் என்னிடம், உங்க மனுவில் தெரிவித்த, பிளாட்டில் கூடுதலாக கம்பம் நடவேண்டும், நிறைய வேலை இருக்கு, பொதுவா கூடுதலாக கம்பம் நடுவதற்கு ரூ.25,000/- தனியாக கேட்போம். நீங்களும், ரூ.25,000/- தனியாக எங்களுக்கு கொடுத்திடுங்க என்று தெரிவித்தார். அப்போது, சி.ஐ.யிடம் நான், நீங்க கேட்பது கவர்மெண்ட் பீசா சார் என்று கேட்டேன். அதற்கு அவர், என்னிடம் உங்களுக்கு ஒன்னுமே தெரியாது, பீசால்லாம் இல்ல, நீங்க ரூ.25,000/- கொடுத்தாதான் உங்க வேலை நடக்கும் என்று தெரிவித்தார். நான், சி.ஐ.யிடம் சார், இந்த பிளாட் பிசினசில் நிறைய லாஸ் ஆயிடுச்சு என்று தெரிவித்தேன். அப்போது, அந்த அறையில், இருக்கையில் உட்காந்திருந்த ஏ.இ.இ. பாலசந்திரன் என்னிடம் ரூ.5000/- குறைச்சு கொடுங்க என்று சொல்லி நீங்க ரூ.20,000/- தனியாக கொடுத்திடுங்க என்று தெரிவித்தார். நான் சி.ஐ. சரவணனிடமும், ஏ.இ.இ. பாலசந்திரனிடமும் சரிங்க சார் பணம் ரெடிபண்ணிட்டு, வரேன் என்று தெரிவித்துவிட்டு கிளம்பினேன், அதற்கு ஏ.இ.இ. பாலச்சந்திரன், நாங்க கேட்ட ரூ.20,000/-மே கம்மிதான் என்று தெரிவித்து, நீங்க ரூ.20,000/- ரெடிபண்ணிட்டு வந்திடுங்க சீக்கரம் வேலைய முடிச்சிடலாம் என்று தெரிவித்தார். லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இருந்தாலும் அப்போதைக்கு நான் அவரிடம், பணத்தை ரெடிபண்ணிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம் லஞ்சம் கேட்ட அரியமங்கலம் டி.என்.இ.பி. ஏ.இ.இ. பாலச்சந்திரன் மற்றும் சி.ஐ. சரவணன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxx (M.Kumar) 07/03/2019. Submitted to the Court of Hon'ble Special Judge for the Prevention of Corruption Act 1988 cases, Trichy:-. Received this report today (07.03.2019) at 17.00 hrs. made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.4/2019 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 19.00 hrs on 07.03.2019. Sd.xxx (F.Xavier Rani) 07/03/2019 Inspector of Police. V&AC, Trichy.